உ
சிவமயம்

# இந்து சாதனம்

# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஞ (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை  450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்  தொலைபேசி: 356

புத் - அக ]  யாழ்ப்பாணம்:- பிங்கள ஞ தை மீ எ - உ வெள்ளிக்கிழமை ( 20 - 1 - 1978 )  [ இல: ௩௦

# ஞான சபையில் ஈசன் நடனக் காட்சி

## நல்கிய நன்னாள்

### சம்பந்த நாயனார் வியந்த தைப்பூச விழா



மகர மாதத்தில் நிறைமதி வேளையில் நட்சத்திரமும் பூசமானால் மிக விசேடமென்பர் அறிஞர்.

நாவலர் அவர்கள் "தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடுஞ் சித்தயோக தினம்வர அன்று மத்தியானத்திலே ஆயிர முகத்தை உடைய பானுகம்பர் ஆயிரஞ் சங்கூத, ஆயிரந் தோளையுடைய வாணாசுரன் குடா முழா ஒலிப்பிக்க. பஞ்ச துந்துபி யொலியும் வேதவொலியும் கந்தருவருடைய கீதவொலியும் மிக்கெழ ஞான சபையிலே சிவபெருமான் - உமா தேவியாரோடு நின்று ஆநந்த திருந்தஞ் செய்தருளினார் என்று கூறியிருக்கின்றனர்.

புரட்டாசி முதல் ஆனி வரை நிகழும் பத்துத் திருவிழாக்களை நினைவு புகட்டும் பதிகமாய் அமைந்து "காணாதே போதியோ பூம்பாவாய்" என்று வினவித் திருமயிலாப்பூர்த் திருத்தலத்திலே திருவாய் மலர்ந்தருளப்பட்ட திருவடைக்காப்பில் (2ம் திருமுறை) ஞானசம்பந்த சுவாமிகள் தைப் பூசத்தைப்பற்றிச் சாற்றுவதை நோக்குவாம்.

(திருமயிலாப்பூர் சுவாமி கபாலீசுவரர்: தேவி கற்பகவல்லி - இப்பதிகப் பண் சீகாமரம்)

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்"

பூம்பாவை என்பாள் மயிலை சிவநேசச் செட்டியார் மகள் ஆவாள், பூர்வபுண்ணியவசத்தால் ஞானசம்பந்தருக்கென அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் காலத்தில் ஊழ்வினை ஊட்ட அரவந்தீண்ட ஆருயிர் நீத்தாள்,

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## அலங்காரத் திருவிழா

கொக்குவில் கிழக்கு. கோணாவளை வைரவர்கோயில் வருடாந்த திருவிழா இம் மாதம் 9. ஆம் தேதி (22-1-78) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் வரை நடைபெறும். தினமும் பிற பகல நான்கு மணிக்கு ஸ்நபனாபிடேகமும் சுவாமி திருவீதி உலா வருதலும் நிகழும். இரவு 6-30 மணிக்கு மலேசியப்புகழ் வில்லிசை வேந்தன் என். கே. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினர் "மகாபாரத விரிவுரை வில்லிசை நிகழ்ச்சியும் நடாத்த ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளது.

## பத்துநாட் பல்கலை இசைவிருந்து

யாழ்ப்பாணம் இரசிக இரஞ்சன சபா 27-ஆவது ஆண்டு இசைப் பெருவிழா 20-1-78 தொடக்கம் 9-1-78 வரைக்கும் தினமும் பிற்பகல் 5-30 மணி முதல் 10-30 மணி வரை ஆ சபா விநாயகர் மண்டபத்தில் (மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும்,

உயர் நிலைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில யாழ் நீதிபதியும், பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவி அரசாங்க அதிபரும, வளாக விரிவுரையாளர்களும், கல்லூரி அதிபர்களும் தினமும் முறையே தலைமை தாங்குவார்கள்.

திரு. இ. செ. மனமதராயன் (சமாதான நீதிபதி) தலைவராகவும், திரு. ச. தம்பையா கௌரவ செயலாளராகவும், திரு க. வை. தம்பு பொருளாளராகவும் விளங்கும் இச்சபை ஆண்டு தோறும் அரிய இசை விழாவை ஒழுங்காகவும சிறப்பாகவும் நடாத்தி வருகின்றது.

## பட்டமளிப்பு விழா

அகில இலங்கை சர்வ மத யோகாசன சபையின் யோகாசன ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் 22-1-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில ஆரம்பமாகும். சர்வ மத குருமார்கள் ஆசியுரை வழங்குவர் திரு. சி. கனகரத்தினம J. P, U. M. அவர்கள் தலைமையுரை வழங்குவர். பட்டமளிப்பு: ஸ்ரீ சிதானந்த யோகி அவர்கள். விசேட யோகாசன நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## கந்தபுராணபடனாரம்பம்

உ

திருவருளைமுன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் நிகழும் தை மீ 11-ஆம் நாள் (24-1-78) செவ்வாய்க்கிழமை தைப் பூசத்திலன்று மு. ப. 10 மணியளவில் கந்தபுராண படனாரம்பம் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் விசேட பூசையுடன் நிகழும்.

சைவாபிமானிகள் யாவரும் சமூகம் அளிப்பார்களாக.

க. சிற்றம்பலம், செயலாளர்.
மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 16-1-78.

## நீதி வழுவா நெறிமுறை

அல்லற்படும் அவனியில் மக்கள் மனவமைதிபெற வழியுண்டா? அனைத்துலகிலும் அல்லோலகல்லோலம் என்றால் இனி என்ன விடிவு என்றுதான் பொதுவாக எண்ணம் தோன்றும. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் அவ்வளவில் நின்றுவிடக்கூடாது. விளைந்த வினை யென்ன? எவ்வாறு இந்த இன்னல் எழுந்தது? என்று அலசி ஆராய்ந்து மனிதன் திருந்தி நடக்கத் தக்கவாறு முயற்சி யெடுத்தல் அன்றோ முறை!

இத்தகைய விபரீத வேளையில் யார் துணையாக வருவார்? எம் மூன்னோர்கள்தான். ஆன்றோர் சொற் கேட்டல் சான்றாண்மையென்பர் அறிஞர், இவ்வாறு புத்திமதி பெறுவதற்காகவே குரவர்களின் மதிமொழிகள் நூல் வடிவாக இருக்கின்றன. நல்லவண்ணம் வாழ்ந்து நம்பனடி பணிந்து அறஞ் செய்த அடியார்களின் வரலாற்றில் ஒழுககநெறியைக் காணலாம். இவ்வாறு ஒழுகுவதற்குரிய பண்பு நீதி வழுவா நெறி முறையென்று சுருங்கச் சொல்லலாம்,

நீதி வழுவா நெறிமுறை என்று கூறும்பொழுது நீதி என்ன, நெறி யாது, முறை ஏது எனத் தனித் தனி ஆராய்ந்து ஆழமான கருத்துக்களைப் புரிந்து கொள்வது பயனுடைத்து. சூடாமணி நிகண்டு என்ன சொல்கின்றது?

மயலறு நெறி நியாயம் மரியாதை நீதி முப்பேர். என்பது சூத்திரம்.

நீதி வெண்பா இயற்றிய நெறியாளர் இந்த நீதியைப் பலப் பல வகையில் விளக்கியிருக்கின்றனர்,

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## நினைவாலயம் நிறுவ அடிக் கல்

தைப் பொங்கல் விழாத் தினத்தன்று மாலை 4 மணியளவில தமிழ்த் தலைவர் திரு சா. யே. வே. செல்வநாயகம் அவர்கள் நினைவாக எழுப்பப்பட இருக்கும சின்னத்துக்கு அடிக்கல் பேராசிரியர் திரு. கே. நேசையா வால் பல சமய வணக்கத்துடன் நாட்டப்பட்டது.

## மருதங் கன்றுகள்

சோவில் திருவீதிகளில் மருத மரம உண்டாக்க விரும்புபவர்களுக்கு மருதங் கன்றுகளை இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் மில்க் வைற் தொழிலகத்தினர் முன்வந்திருக்கின்றார்கள். விரும்புவோர் பெற்றுக்கொள்வார்களாக,

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

பிங்கள ஞூ தை மீ எ-உ வெள்ளி

# வேடிக்கை வேண்டாம்

எதிர்காலத்தை நன்முறையில் இயக்குவதற்கு எத்தனங்கள் எடுக்கப்படும் இவ்வேளையில் நாட்டில் எவ்வித வேடிக்கைகளும் இடம்பெறுவது புத்திசாலித் தனமாகததும் அன்றிப் பொருத்தமுமாகாது. இந்த உணர்ச்சி ஊரவர்கள் மத்தியில் ஊடுருவுமேயானால் உள்ளபடி வருங்காலத்தில் வாழ்க்கை வளமாக மலருமென்பதற் கையமின்று.

அடுத்த திங்களில் அரசியலில் அதிமுக்கியமான மாற்றமாக மக்கள் சென்ற பொதுத் தேர்தலிலே ஆட்சிக்குத் தெரிவுசெய்த கட்சித்தலைவர் சனாதிபதியாகக் கடமை ஏற்கும் வைபவம் மிகமுக் கியமானதென்றாலும் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து வீண்விரயத்துக்குரிய வேடிக்கை விளையாட்டுகள் எவையும் இருக்கவொண்ணாதென அப்பெரும் பதவியைக் கை ஏற்கவிருக்கும் அவரே விதித்துள்ளது உதார குண உயர்நெறியே.

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்"

என்றார் வள்ளுவர்.

எங்கள் நாட்டில் மக்கள் என்ன நிலையில் வாழ்கின்றார்கள். வறுமையும், வரட்சியும், பொல்லாங்கும், புரளியும் பெருமளவில் நிலவி வருகின்றதென்று எல்லாக் கட்சித்தலைவர்களும் எடுத்துக்காட்டிய வண்ணம் இருந்தும் அக்கட்சிகளே ஆடம்பரமான திறப்பு விழாக்களையும் இதர வைபவங்களையும் பெருந்தொகைப்பணமும், நேரமும், ஆற்றலும் செலவுசெய்து நடத்திக் காலத்தை அவமே கழிக்கின்றார்கள். கருத்தொன்று, காரியம் இன்னொன்றாகக் கருமங்கள் நடைபெறுவதென்றால் இது கபட நாடகமன்றோ!

உழைப்பே மனிதனை உயர்த்துவது. நாட்டை வளம் பெருக நடத்த வல்லது.

"தூங்காதே தம்பி தூங்காதே! - நீ
சோம்பேறி என்று பட்டம் வாங்காதே"

என்று சாதாரணமாக நாட்டுப் பாடல் சுட்டிக் காட்டுவதையாவது மக்கள் சிந்திக்க வேண்டாமா?

எதற்கும் விழா எடுப்பது மட்டுமல்ல! எள்ளளவும் ஒவ்வாத வீண் விளையாட்டுக்களையும் பொன்னும், பொருளும் பொழுதும் மனம் போனவாறு செலவு செய்து பயனற்ற கருமம் பார்க்கும் மனப்பான்மை முற்றாக ஒழிந்தாலன்றி முன்னேற்றம் அடைய முடியாது.

நாட்டின் பண நிலை படுமோசமாக இருக்கும் பொழுது பல வேறு பிற நாடுகளிலிருந்து கடன் பெற்றே அரச அலுவல்கள் நடைபெற வேண்டியிருக்கும் வேளையில் யாராவது வீண் விரயத்தை விரும்புவதென்றால் அது விபரீதமே.

எனவே இனிமேலாவது ஆனமுதலில் அதிகஞ் செலவு செய்யாது வாழ மக்கள் பழக வேண்டும்

வேடிக்கையும் வேண்டாம்? வீண் விளையாட்டுகளும் — களியாட்டங்களும் வேண்டாம்; வேண்டாம்.

## நாவலர் நெறிநாட்டிய சுன்னைப்பாவலர்

"இறை — ஒளி"

பண்டிதம ணிக்கன்று பாடும் பகர்ந்திட்ட
தண்டமிழ்ச் சற்புலவர் தன்னிகரில் — பண்புகழ்
நாவலர் நன்னெறி காட்டிய சுன்னாகர்ப்
பாவலனார் சீர்சொலுயிப் பார்,

# முன்னைநாள் 'இந்துசாதன' ஆங்கில ஆசிரியர் அமரரானார்

## பல்வகைப் புலமைச் செல்வர்- குலசிங்கப் பெரியார்

ஈழத்துப் பெரியார்கள்வரிசையில் இடம்பெறும் தகைமை வாய்ந்த பழம் பெரும் சட்டத்தரணி திரு. ஏ. வி. குலசிங்கம் அவர்கள் சென்ற திங்கட்கிழமை (16-1-78) இவ்வுலக வாழ்வு நீத்து இறையடி சார்ந்தனர்.

ஆங்கில இந்துசாதன ஆசிரியராகத் திறம்பட (1941—1946) திரு. குலசிங்கம் அவர்கள் கடமையாற்றிய பெருமை இந்துசாதனத்துக்குரியது.

முன் Ceylon "Daily News" பத்திரிகை ஆசிரியராக நன் மதிப்புப் பெற்றிருந்தார் திரு. குலசிங்கம் அவர்கள்.

ஆரம்பத்திற் பாடசாலை ஆசிரியராகப் பணிபுரிந்து பின் சட்டத்தரணி ஆகிச் சட்டத்துறையிலே தனக்கென ஒரு தனியிடம் வகுத்து நீதியரசர்களாலும் சட்டத்தரணிகளாலும் பொது மக்களாலும் பெரிதும் மதிக்கப்பெற்ற இவர் அரசியலில் ஆழ்ந்த கவனஞ் செலுத்தி வந்துள்ளார்.

மிகப் பழைய யாழ்ப்பாணச் சங்கத்திலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலும் பெரும்பங்கெடுத்து அரசியற் கொள்கைகளை ஆராய்ந்து கருத்துரைக்கும் புலமையுள்ளவராகத் திகழ்ந்தனர். 1947 ஆம் ஆண்டு பாராளுமன்ற ஊர்காவற்றுறைத் தொகுதித் தேர்தலில் அநுகூலமடையாதபொழுதிலும் தேர்தல் முடிவை ஆட்சேபித்து மேல் முறையீடு தானாக உயர் நீதிமன்றத்தில் அனைத்து சட்ட வேதைகள் வியப்புற விவாதம் செய்து தனது அரசியல் அறிவையும் சட்ட நிபுணத்துவத்தையும் வெளிப்படுத்தினர்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் நீரூற்றுப் போன்று சொற்பெருக்காற்றும் திறமையும் ஆங்கிலத்தில் அழகாகவும் ஆணித்தரமாகவும் எழுதும் வல்லமையும் படைத்த திரு. குலசிங்கம் அவர்கள் யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகப் பெருந் தொண்டு புரிந்து அங்கத்தவர்களுக்கு அரிய வழிகாட்டியாக விளங்கினார்.

திரு. குலசிங்கம் அவர்கள் பல துறைப் பண்பாளர். விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டுக் கமத்தொழிலின் கண்ணியத்தை ஏனையோருக்குப் புலப்படுத்தி யாவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக வயோதிப நிலையிலும் அத் துறையில் ஆர்வங் குன்றாது வாழ்ந்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியது.

எண்பத்தெட்டாண்டுகள் இவ்வுலக வாழ்க்கையை இனிது நடத்தி ஈசனடி சார்ந்த பெரியாரின் இறுதிக் கிரியைகள் பெருந்தொகையான சுற்றத்தவர்கள் நண்பர்கள் பொது மக்கள் சமுகத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

## ஞானசபையில் ஈசன் நடனக் காட்சி

( -ஆம் பக்கத்து வளர்ச்சி)

ஆனால் அவளின் உடம்பு எலும்பாகச் சேமிக்கப்பட்டிருந்தது, திருத்தல யாத்திரைத் தொண்டாற்றி வந்த தோணிபுரத் தோன்றல் இவ் வரலாற்றினைக் கேட்டு இறைவன்பால் இன்னிசை பாடினர். பதிகம் பாடி - முடியவும் பூமபாவை உயிர்த்தெழுந்து சிவத்தை மேவினாள் என்பது திருத்தொண்டர் புராணக் கூற்று.

சமய குரவர்கள் எவ்வாறு திருநாட்களை நினைவு கூர்ந்து எம் பெருமான் கோயில் விழாத் தரிசனம் செய்தார்கள் என்பதைச் சைவ சமயிகள் உற்று நோக்குதல் வேண்டும்.

தை 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 24-1 78 பூச விழா.

திருச்செந்திரார்க்கிடே என்று தைப்பூசவபிடேகம்.

## உய்வகை அருளாய் என்றுஉள்ளம்உருக்கும் திருவிடைமருதூர்த் திருப்பாட்டு

(முன் வளர்ச்சி -- 7)

ஏனையோர்க்கின்பம் உகந்திர் என்று எடுத்துக் காட்டி அடியேற்கும் அருளுதிரே எனத் திரு வீழிமிழலைப் பதிகம் பாடி "எறிந்த சண்டி, இடந்த கண்ணப்பன் பணிந்த பார்த்தன் பகீரதன்', என்ற அடியார்களை நினைவுக் கழைத்த சுந்தரனார் திருவாஞ்சியத் துறையும் இறைவனை 'வினைப்பவர் வினை நலிவிலரே' என மாசில்லாப் பத்தும பாடி "நெறியில் வழுவா நியமத்தவர்கள் செறியும் நறையூர்ச் சித்தீச்சரமே" என்று அப் பதியையும் வணங்கித் திரு அரிசிற்கரைப் புத்தூர்ப் பெருமானைப் போற்றும் வகையில் "நெடுமால் பல நாள் சிறப்பாகிய பூசனை செய் பொழுதில் ஒரு மலராயிரத்திற் குறைவால்நிறைவாகவோர் கண்மலர் சூட்டலுமே பொருவிறலாழி புரிந்தளித்தீர்" எனவோர் திருவிளையாடலைச் சிறப்பா யுரைத்து அடியார் பெருமையை மேலும் விளக்குவான்.

"அகத்தடி மைசெய்யும்
அந்தணன் தான்
அரிசிற் புனல்கொண்
டுவந்தாட்ட நின்றுமி
மிகத்தனர். வெய்திக்
குடத்தையும் தும்முடி
மேல்விழுத் திட்டு
நடுக்குதலும்
வருத்தவனுக்கு நித்தற் படியும்
வருமென் றொருகாசி
னைநின்ற நன்றிப்
புகழ்த்துணை கைபுகச்
செய்துகந் தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப்
புனிதனீரே"

எனத் தொண்டர்தம் பெருமை தொடுத்தனர் வளரும்

நினைவு

## நாவலர் நெறியில் நற்றமிழ் வளர்த்தவர்

சுன்னைக் குமாரசுவாமிப்புலவர் என்னாளும் ஏத்தப் பெறுவர்

நினைவுக்குரிய பெரியாரர்களை ஆண்டுக்கொரு முறையாவது உள்ளத்தால் உரையால் உவந்து போற்றுவது தமிழகச் சான்பு. நாவலர் நற்றகையாரை நெஞ்சில் நீங்காது நினைத்துத் தமிழ்த் தொண்டு புரிந்த அறிஞர்கள் பலருளர். அவர்களில் அரிய இடம் வகுக்கும் பெருமை சுன்னைக் குமாரசுவாமிப் புலவருக்குண்டு.

நாவலர் நினைவுச் சின்னமாகிய வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியப் பதவி வகித்தவர் குமாரசுவாமிப் புலவர் என்றால் எத்தகைய புகழ் புலவருக்குண்டு என்பதை யூகித்தறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய அறிஞரின் இதோபதேசம்

## திருவாசகத்தைச் சுவைத்துத் திளைக்கும் உணர்ச்சி

"தன் ஊன் பெருக்கத்திற்குத் தான் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?" என்ற பொய்யா மொழியும் அரிய தமிழ்மறையுமாகிய திருக்குறளை 18-ஆண்டுகளுக்கு முன் ஆழமாகப் பயின்ற காரணத்தால் அதுவரை மாமிசம் புசித்துவந்த நான் அதனைக் கைவிட்டேன். அன்றிலிருந்து இன்று வரை 18- வருடகாலமும் சைவ உணவையே உண்கிறேன். அதனல், "அன்பைப் பெருக்கி என் ஆருயிரை காக்கவந்த இன்பப்பெருக்கே, இறையே பராபரமே" என்னும் தாயுமானுர் வாக்காக்கிய அன்புத் தமிழைக் கற்குந்தோறும், நான் அன்பு உணவாகிய தாவர உணவை உண்பதில் பெருமையடைகிறேன். அன்பு வாழ்க்கை வாழ நான் இவ்வாறு முற்படலாலேதான் அன்பின் உச்ச நிலையில் நின்று மாணிக்கம் போன்ற தமிழ்மதுர வாசகங்களை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகமாகப் பாடி அருளியதைப் படித்துப் படித்து உணர்ந்து அனுபவிக்க முடிகிறது. ஞானப் பெட்டகமாகிய திருவாசகம் சைவர்களாகிய உங்களுக்கு மட்டுமல்ல தமிழ் முஸ்லிங்களாகிய எங்களுக்கும் சொந்தமானதுதான ஏன், மணிவாசகர் உலகம் முழுவதிற்குமே சொந்த மானவர் என்பதை கிறிஸ்தவ பாதிரி ஆகிய ஸ்ரீ ஜீ யூ போப் திருவாசக ஞானத் தமிழில்திளைத்து இறக்கும் போதுகூடத் தமது கல்லறையில் "தமிழ் மாணவன்" எனப் பொறித்ததால் நாம் அறியலாம். திருவாசக உண்மைகள் பல குணங்குடியார் பாடிய பாடல்கல்களிலும் மிளிர்வதைக் காணலாம்."

இவ்வாறு மன்னர் எருக்கலம்பிட்டி தமிழ்ப் புலவர் திரு. எம். சீ. எம் காசிம் ஆலிம் அவர்கள் ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டத்தினரால் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் கொழும்பு சிவதொண்டர் திரு ம. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற திருவாசக விழாவிற் பேசுகையிற் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் உடலின் இழிவை அறியாமல் அது எந்தநேரம் இறந்துபடும் என்பதைத் தெரியாமல் உடல் ஓம்பல் ஒன்றையே வாழ்வின் ஒரே குறிக்கோளாக உடையவர்கள் மனித உருவில் இருந்தாலும் மிருக வாழ்க்கை வாழ்பவர்களே. அவர்கள் அன்பின் அரிச்சுவடியை அறியாதவர்கள்" என்றார்.

தலைவர் தமது உரையில் உலக முழுவதிலும் உள்ள புண்ணிய தலங்களுள் தலை சிறந்த ஒன்ருகிய புனித திருக்கேதீச்சர மண்ணில், உலகிலேயே உள்ள பக்தி இலக்கியங்களின் சூடாமணியாகத் திகழும் திருவாசகத்தையும் அதனைத் தமிழர்களுக்கு அவர்கள் கோடானுகோடி வருடங்கள் செய்த புண்ணியவசத்தால் முதுசொத்தாக விட்டுச் சென்ற மணிவாசகப் பெருமானையும் பற்றிச் சிந்திப்பது, விழா எடுப்பது எமக்கு மிகவும் ஆக்கம் தரும் சிவபுண்ணியமாகும். இந்த ஞான வேள்வியை வருடந்தோறும் தவருது செய்யும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரையும் அனுக்கத் தொண்டர்களையும் பாராட்ட வேண்டியதும் ஆதரிக்க வேண்டியதும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும் என்றார்.

---

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகார விளம்பரம்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்**
**வழ. இல. ஈடு 12782**

1. சின்னத்தம்பி நடராசா
2. பெண் நாகரத்தினம். இருவரும் துபைபளை

— வாதிகள்

எதிராக

1. புலோலி மேற்கு வெற்றிவேலு மயில்வாகனம் தன்வகையிலும் தனது காலஞ்சென்ற மனைவி இராசம்மாவினது ஆதனங்களின் சட்ட பூர்வ பிரதிநிதியாகவும்
2. ஈ; துரைராசா (3) பெண் ருக்குமணி இருவரும் புலோலி மேற்கு

— பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும், குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும், இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ஆம் ஆண்டு மாசி மாதம் 9-ஆம் திகதி (9-2-78) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் குறித்த ஆதனத்தில நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 2850/— வும் மேலும் ரூபா 1500/— வருடமொன்றுக்கு நூற்றுக்கு (100 க்கு) 10 வீத வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ந் திகதியிலிருந்து தீர்வைத திகதியாகிய 19 5ம் ஆண்டு வைகாசி மாதம் 30 ந் திகதி வரையுமான வட்டியும்,

அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 327-10 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 206-77½ நடைபெற வேண்டிய செலவு ரூபா 57-97½ மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 63-35) கொடுக்க வேண்டியிருப்பதாலும் ரூபா 1100/- வட்டியால் 8-10-76 ம் திகதியில் வழக்காளிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி, பருத்தித்துறைக் கோவிற்பற்று (1) புலோலி மேற்கு வென்றி பாகுதேவன் குறிச்சியிறை சொக்கன் கல்லடி நிலப் பரப்பு 6 குளி 3 15/16, இதற்கு உ. சி வேலாயுதத்தால் அளந்து விந்தாரிக்கப்பட்ட 166-ம இலக்கப் பிளானில் 'க' என்னும் அட்சரத்தால் குறிப்பிடப்பட்டதுமான ஆண்டுக்காணி நிலபரப்பு 2 குளி 15 15/16 வீடு கொட்டில்களும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும், தெற்கும் வெற்றிவேலு மயில்வாகனத்துக்குரிய ஆதனம், மேற்கு அருணசலம் பெண் பாறுபதிக்கும் மறுபேருக்கும உரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும்.

2. மேற்படி கோவிற்பற்று, புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை கொட்டோடை நிலப்பரப்பு 27 5/8 இதில் கிழக்குப்புறமாக இருபத்திநாலிலொரு பங்குககுரிய நிலபரப்பு 8 குளி 11/32, பனைகள், வடலிகளும், எல்லை கிழக்கும் தெற்கும், ஒழுங்கை, வடக்கும் மேற்கும் சங்கரியார் கந்தையாவின் உரிமைக்காரரினதும் மறுபேருக்கும் உடைய ஆதனமும், இவவெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய், பதினெட்டில் இரண்டு பங்கும்.

தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல்,
பருத்தித்துறை, 11-1-78

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்
கொமிஷன் விலைமதிப்பாளரும்
83. 20-1-78

---

உ

# சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

# சித்தாந்தத் தேர்வு - 1977

### நேர சூசனம்

| | பிரவேச பண்டிதர் | பால பண்டிதர் | பண்டிதர் |
|---|---|---|---|
| **வெள்ளிக்கிழமை 27-1-78** | | | |
| மு. ப. 9-00 — 12.00 | இலக்கியம் | இலக்கியம் | இலக்கியம் |
| பி. ப. 1.00 — 4-00 | இலக்கணம் | இலக்கணம் | இலக்கணம் |
| **சனிக்கிழமை 28-1-78** | | | |
| மு. ப. 9-00 — 12-00 | திருமுறை | திருமுறை | திருமுறை |
| பி. ப. 1-00 — 4-00 | சாத்திரம் | சாத்திரம் | சாத்திரம் |
| **ஞாயிற்றுக்கிழமை 29-1-78** | | | |
| மு. ப. 9-00 — 12-00 | உரைநடை | உரைநடை | உரைநடை |

### அறிவித்தல்

சித்தாந்தத் தேர்வுகள் 27-1-78 முதல் 29-1-78 வரை நடைபெறும், பரீட்சார்த்திகளுக்கு நேர சூசனம் நுழைவுச் சீட்டுப் பத்திரம் என்பன அனுப்பப்பட்டன. கிடைக்காதோர் தொடர்பு கொள்ளவும்.

பரீட்சை நிலையம்: வண் - நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.

450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம். 16-1-78

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்.

---

உ

# சைவபரிபாலனசபை

நடாத்தும்

# சித்தாந்தப் பரீட்சைகள்

பிரவேச பண்டித பரீட்சைக்குரிய பாடப்பகுதி
சிவஞானபோதச் சூத்திரம் 12. மனனம் செய்தல்.

உ

திருச்சிற்றம்பலம்

## சிவஞானபோதம்

(முன் வளர்ச்சி — 2)

பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

பதினொராஞ் சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

---

## நீதி வழுவா நெறிமுறை

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

"பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போதல் நெறியன்றோ"?

என்றுள்ள வெண்பாவை எடுத்துக்கொண்டால் நீதியையும் நெறியையும் வெவ்வேருக உய்த்துணர வேண்டி இருக்கிறது.

உலக நீதி சைவநீதி என்ற உண்மை "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்றார் புராணகாரர்.

---

## SINHALESE—TAMIL COLLABORATION

(continued from page 4)

the entire country and to international opinion and the Comity of Nations and to institutions like the United Nations, the bloc of Non-Aligned Countries, the International Commission of Jurists, the International Court of Justice, Amnesty Intrnational, and other world wide Organizations and Institutions of various nature devoted to the vindication of Human Rights and to the promotion of Human Welfare including those devoted to Relief of Human Suffering whose succour was obtained during recent unhappy incidents in Sri Lanka An impression more favourable both in and out of Sri Lanka could be created by the T U L F. representatives participating or trying to participate in the work of the Select Committee. It is possible that a dissenting report even if it be a minority report, could carry its own weight both in and out of the country and result in redress now or even at some later time and serve as bulwark for the future. Let not any case go by default.

(14) The task of rehabilitation of those Tamils in distress caused by recent happenings, the position of Tamil officers in the Service of the State the position of the unemployed, specially the Tamil youth and the education and well-being of the younger generation, and the promotion of inter-communal good-will, even if a separate State is established, are among other things requiring consideration.

(To be continued)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே
விரவி விரவி நின்று உந்திபெற,
விரைய விரைய நின்று உந்திபெற

Within the vast expanse of Divine Bliss, where there is neither darkness nor light, should you mingle without faltering, yea, mingle without faltering.

Hindu Organ

Friday, 20th January, 1978.

# LOSS OF A LANDMARK

A full life fruitfully lived — that is how the story of the Grand Old Man of the Northern Bar who passed away last Monday can best be summarised.

A. V. KULASINGAM has been a very familiar name in the social sphere of this country for several decades. Teacher, Journalist, Lawyer, Agriculturist and Politician that Mr. Kulasingam had been, the entire social community was his area of activities.

Shakespeare in estimating the worth of an ideal man summed up his definition sweetly in the lines. "His life was gentle, and the elements so mix'd in him that Nature might stand up and say to all the world 'This was a man.'"

Gentleness was Mr. Kulasingam's *forte*. Consequently there was in him that lovely characteristic — simplicity. He was always plain in appearance and manner. Added to his intellectual ability was a sound common sense that enabled him possess the gift of grasp. Hence his keen insight that made him profound.

As Editor of the "Hindu Organ" during a difficult period when the political sphere of the country was in the grip of revolutionary thinking, Mr. Kulasingam ably guided the Tamil-speaking people in their approach to the changing mood in politics. Of course, his earlier successful contribution to the editorial excellence of the Ceylon "Daily news" was well known.

He was a living legend throughout his life time.

## TYPICAL KULASINGAM THOUGHT

[ Here we reproduce an extract from a leading article of MR A. V. KULASINGAM written during the days of the Soulbury Commission. These few thoughts couched in elegant language are enough to evaluate the worth of Mr. Kulasingam as a gifted journalist and practical politician ]

"What the Tamils want is not the favour of a portfolio in the Ministry dependent on the whims and fancies of those who have done their best to make a mockery of democracy, but a proper place for the representatives of the minorities in the Council of Ministers as a matter of right.

"Now that the Tamil case has been fully placed before the Commission, we trust that the Tamil Congress will not prefer to rest after its labours. It must continue to strengthen its organisation and keep the Tamils together, it must continue to safeguard the community against treachery as well as weakness. It is the latter failing more than a desire to benefit at the expense of the community, that has hitherto stood in the way of Tamil unity. Even those who wavered now realise that the politicians who are in power in the South can never be convinced of the justice of the Tamils' demand."

## SINHALESE—TAMIL COLLABORATION

By S. SIVASUBRAMANIAM

(continued from 6-1-78)

In fact, more questions could be added to the list and some could be varied, to the advantage of both the Tamils and the country as a whole.

(12) The Tamils have not ceased to be citizens and inhabitants of Sri Lanka. Hence whatever affects the country including constitutional and political affairs is in the very nature of things bound to affect the Tamils perhaps in a more intense form specially as they are in an unequal position. Thus, it is extremely incumbent on Tamil leadership to have their say at every turn, and at every stage and by maintaining the closest possible proximity to events, personalities and trends of thought at all times without cessation even under going the painful experience of what might be considered discouraging circumstances and rebuffs. The present unequal position is bad enough and care should be taken that things do not become worse.

(13) By assuming the role of Parliamentary Opposition and the Leadership thereof, the T U L F. has taken on itself certain responsibilities, not only to the Tamil people but to the Assembly,

(continued on page 3)

# Saiva Jnana Darshanam

### Sutram 8

## Relating to Saiva Sadhanas like சரியை, கிரியை, யோகம், ஞானம்.

Saivaism of all religious traditions recognizes that the powers of human nature (ஞானம், கிரியை முதலியன) which bear witness to God, are developed in different degrees in different saints. Therefore there are bound to be many paths up the steep hill (தத்வசோபானம்) of pure consciousness, the sacred realm of movement of the semi-freed beings like the Pralayakalar and Vignanakalar. Saiva tradition has also preserved for us, the vision of five different grades of Godly experience, experienced by those Saints particularly Pralayakalar. Of the five, the third one in which Jnanam and Kriya fuse into one is the most high and the most ecstatic. The first two are pre-ecstatic and the last two are post-ecstatic. The first two are intertwined with external worship, repetition of mantras, hymns etc., along with rituals, yogic absorptions and glimpses, thrills of identification with God, and thrills of separation from him. One does not know whether the distinction between சரியை. கிரியை, யோகம், ஞானம் etc., continues to exist even in those high levels of pre ecstatic experience. But Saivaism does maintain this distinction even at the highest level, perhaps to instil into our minds, the highest bliss is not a mere poor isolated worked up spiritual experience, but an enriched, integrated experience in which the physical, the mental, the intellectual and the spiritual aspects are all fused into one and sublimated into one sweet bliss of joy and surrender.

In the third and the most high ecstatic experience the soul undergoes the greatest of all calamities in its entire history of evolution from the state of a worm to the state of a Saint. It is a near death unto the soul, 'அந்தோ! செத்தேன்! பருகியும் ஆரேன்! விழுங்கியு மொல்லகில்லேன்!" are St Manickavasagar's words. It is an all consuming experience, according to Agamic traditions, it is the vision of God in his Supreme splendour by the soul in its utmost and perfected purity "இருள் கடிந்து — உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின்தன்மை" are again our Saint's words According to vedic traditions it is the vision of the Brahma-tatva by the Atma-tatva. "Beyond darkness, I see within me this Great being who shines effulgent like the sun" says our Vedic Rishi, slowly rising from the bosom of the soul, the hidden Shakti manifests itself as a flood of illumination, erasing off as it were the soul of all its existences and all its experiences. This ecstatic experience becomes intense and frequent in the case of Saints who have attained their utmost maturity of devotion to their personal God, and their utmost maturity of Jnanam about their impersonal God. It is such Saints who are said to be perfected souls qualified to bathe in what our ancients described as திருவருட்கடல், the great ocean of divine power, divine wisdom and divine grace. The hymns, mantras and songs coming from the lips of such perfected Saints are all post-ecstatic ejaculations, are all integral in character and are all worshipped by the Saiva community as திருவருட்பாடல்கள்

These visions of God have been experienced by different Jnanis belonging to different climes, different periods and different theistic faiths and therefore they cannot be set aside as mere imaginative conjurations but their university confers upon them what is called "an objective validity."

It is in terms of these visions and experiences, all theistic religions have formulated their religious philosophies, their religious doctrines, their Gods and Godesses. Our Saiva Jnanis too in trying to direct us to these integrated experiences, called சிவரூபம், திருவடிப்பேறு etc., said, that there are four fundamental principles: சிவம், பதி, பசு, பாசம், all of which should be first heard of. Then they should be thought upon. Then they should be meditated upon to reach the final goal of freedom and perfection.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, January 20, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org